திருவிடைமருதூர் ஒன்றியத்தில் 1980-81-ல் கால்நடைகளுக்கு அளிக்கப்பட்ட கோமாரி நோய் தடுப்பு சிகிச்சை

*வினா எண் 19—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியத்தில் 1980—81-ல் கோமாரி நோயினால் இறந்துவிட்ட கால்நடைகள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) கோமாரி நோய் தடுப்பு மருந்து திருவிடைமருதூர் ஒன்றியத்திற்கு வினியோகிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில் எவ்வளவு கால்நடைகளுக்கு தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியத்தில் 1980-81-ல் கோமாரி நோயினால் எந்த கால்நடைகளும் இறக்கவில்லை.

(ஆ) ஆம்.

(இ) மொத்தம் 150 கால்நடைகளுக்குத் தடுப்பு சிகிச்சை 1981, மே மாதம் வரை அளிக்கப்பட்டது.

திரு. செ. இராமலிங்கம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தவறான தகவலைத் தருகிறார்கள். 1980-81லே என்னுடைய கிராமத்திலே 7 மாடுகள் கோமாரி நோயினால் இறந்திருக்கின்றன. 150 கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி மருந்துகள் போடப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் எந்தெந்த கிராமங்களில் தடுப்பூசி போட்டு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் தவறான தகவலைத் தருகிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். திருவிடைமருதூர் ஒன்றியத்தில் ஆடுதுறையில் ஒரு கால்நடை மருந்தகமும், நாச்சியார் கோவிலில் ஒரு கால்நடை மருந்தகமும் இருக்கின்றன. ஆடுதுறை கால்நடை மருந்தகத்தில் அப்பகுதியில் உள்ள மொத்தம் 54 கலப்பின கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று நாச்சியார் கோவிலில் இருக்கின்ற கால்நடை மருந்தகத்தின் மூலம் அங்கே இருக்கின்ற கால்நடைகளுக்கும் அந்தப் பகுதியினைச் சுற்றி இருக்கின்ற கால்நடைகளுக்கும் கோமாரி நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்து இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1982 செப்டம்பர் 7]

திரு. செ. இராமலிங்கம்: தலைவரவர்களே, திருவிடை மருதூர் ஒன்றியத்தில் திருநாகேஸ்வரம், வேப்பத்தூர் போன்ற இடங்களில் கால்நடைகள் இறந்திருக்கின்றன. அந்தப் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைப்பது பற்றி சென்ற நிதியாண்டில் கேட்டபோது அங்கே மருத்துவமனை துவங்கப்படும் என்று சொன்னார்கள். எனவே கால்நடைகள் நோயினால் இறந்து போவதைத் தடுக்க வேப்பத்தூர், திருநாகேஸ்வரம் ஆகிய இடங்களில் புதிய மருத்துவமனை துவங்குவதற்கு முன்வருவார்களா? அடுத்து கால்நடை மருத்துவமனைகளிலிருந்து விரிவாக்க ஆய்வாளர்களுக்கு இப்படிப்பட்ட நோய்களுக்கான மருந்துகள் கிடைப்பதில்லை என்கின்ற புகாரையும் என்னிடத்திலே சொல்லி இருக்கிறார்கள். எனவே மருந்துகள கால்நடை ஆய்வாளர்களுக்கு உரிய நேரத்திலே கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, திருநாகேஸ்வரம், வேப்பத்தூர் போன்ற இடங்களில் கால்நடை மருந்தகம் அமைப்பது பற்றி அரசு ஆராயும். அடுத்து விரிவாக்க ஆய்வாளர்களுக்கு மருந்துகள் சரியான முறையில் போய்ச் சேரவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படிப் போகவில்லை என்றால் அதைப்பற்றி அரசு பரிசிலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் இந்த கோமாரி நோய் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் வந்து கொண்டிருப்பது அரசுக்கும் தெரியும். ஆனால் அப்படிப் பாதிப்பு ஏற்படுகின்ற பகுதிகளில் மருந்துகள் இல்லை என்று சொல்லப்படுகின்றது. ஆகவே மருந்துகள் எவ்வாறு கொள்முதல் செய்யப்படுகின்றது, மருந்து வாங்குவதற்கு மத்திய அரசு உதவி செய்கின்றதா? இனி எதிர்காலத்திலேயாவது மருந்துகளை வாங்கி ஸ்டாக் வைக்கின்ற வகையிலே முன்கூட்டியே நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, கோமாரி நோய்க்கு இரண்டு வகையான மருந்துகளை வாங்கி சிகிச்சை அளித்துக்கொண்டிருக்கிறோம். மத்திய நிதியுதவித் திட்டத்தின்படி இரண்டு வகையான மருந்துகளை வாங்குகிறோம். அவற்றில் ஒன்று பாலிவேலன்ட் 1980–81-ல் வாங்கப்பட்ட டோஸ்கள் 96,040. அவற்றின் விலை 5,99,969.60 ரூபாய். மோனோவாலண்ட் என்ற மற்றொரு மருந்து 1980–81-ல் 89,280 டோஸ்கள் வாங்கப்பட்டன. இதன் விலை 1,39,521.30 ரூபாய். ஆக மொத்தம் 7,39,490.90 ரூபாய்க்கு கோமாரி நோய்க்கான மருந்துகள் வாங்கி கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.